NCHRO
National Confederation of Human Right Organizations
State President: Advt. Bavani B. Mohan • State General Secretary: Advt. N.M. Shajahan
18A, First Floor, Sungam Pallivasal Street, East Veli Street, Madurai - 625 001. Email: nchrotn@gmail.com

தேதி : 03.06.2021

# ஏழு தமிழர்கள், இஸ்லாமிய ஆயுள் சிறைவாசிகள் மற்றும் வீரப்பன் அண்ணன் விடுதலைக்கான அரசியல் தலைவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் கூட்டறிக்கை:

**கருணை மற்றும் நீதியின் அடிப்படையில் பாரபட்சம் பாராமல் ஏழு தமிழர்கள் உட்பட 10 ஆண்டுகள் சிறைவாசம் கழிந்த இஸ்லாமிய ஆயுள் சிறைவாசிகள் மற்றும் வீரப்பன் அண்ணன் மாதையன் ஆகியோர்களை தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திராவிட முன்னேற்ற கழக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்சொன்ன அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என கோரி சமூக ஆர்வலர்கள், நீதி மற்றும் ஜனநாயக சிந்தனையாளர்கள், சமுதாயத் தலைவர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் திரை பிரபலங்கள் உட்பட நடுநிலை சிந்தனையாளர்களால் வெளியிடப்படும் கூட்டறிக்கை கோரிக்கை மனு...**

மாண்புமிகு திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக முதலமைச்சராக பணி ஏற்று நடத்திக் கொண்டிருக்கும் ஆட்சியின் சிறப்புக்கள் அனைத்து தரப்பு மக்களாலும் பாராட்டப்பட்டு வரும் சூழ்நிலையில் பெரும் சவாலாக தமிழக மக்கள் மற்றும் அரசு சந்தித்து வருகின்ற கொரோனோ தொற்றிலிருந்து மிக விரைவாக தமிழகம் மீண்டு வருவதற்கு அனைத்து சமூக நல ஆர்வலர்களும் தங்கள் ஒத்துழைப்பை அரசுக்கு வழங்குவோம் என்பதை தெரியப்படுத்துவதோடு தாங்கள் இந்த கொரோனோ தொற்றை சிறப்பாக கையாண்டு வருவதற்காக பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். மேலும் தாங்கள் சமீபத்தில் ஏழு தமிழர்களின் விடுதலைக்காக ஜனாதிபதி அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு அதேபோல் பேரறிவாளன் உட்பட பல்வேறு சிறைக்கைதிகளுக்கு பரோல் வழங்கியமைக்காக இந்த கூட்டறிக்கை குழுவானது உங்களை வாழ்த்துகிறது. அதேசமயம் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு 7 தமிழர்கள் உட்பட 10 ஆண்டுகள் சிறைவாசம் கழிந்த ஆயுள் சிறைவாசிகளையும் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சிறைவாசிகளையும் கருணையின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும், பாரபட்சம் பாராமல் தங்கள் அரசு அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

ஆயுள் தண்டனை என்பது சட்டப்படி ஆயுள் முழுவதும் சிறையில் இருப்பதாகும் என்றாலும், அச்சிறைவாசிகளின் தண்டனையை ரத்து செய்யவோ அல்லது குறைக்கவோ முழுமையான அதிகாரத்தை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அரசியல் சாசனம் வழங்குகிறது. குற்றயியல் சட்டம் 432 அடிப்படையில் தண்டனை குறைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும் ஆனால் அரசியல் சட்டப்படி பிரிவு 161 இன் அடிப்படையில் முன் விடுதலைக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காவிடினும் மாநில அரசுகளுக்கு முன் விடுதலை செய்வதற்கு உரிமை உண்டு. எனவே இருபது ஆண்டுகள் சிறைவாசம் கழித்தவர்களை விடுதலை செய்யும் வகையில் தமிழக அரசு முன்விடுதலை திட்டத்தை 1994இல் கொண்டு வந்தது. எவ்வளவு பெரிய குற்றங்களை செய்தவர்களாக இருந்தாலும் இத்திட்டத்தின் கீழ் அவர்களை முன்விடுதலை செய்ய

முடியும். எனவே மாநில அரசு தன் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி அவர்களை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய முடியும். அண்ணா பிறந்தநாள், அண்ணா நூற்றாண்டு, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு, செம்மொழி மாநாடு என்று பல நிகழ்வுகளில் பத்து ஆண்டுகளை கழித்த ஆயுள் சிறைவாசிகள் தமிழக சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த அதிமுக ஆட்சியில் அண்ணா பிறந்தநாள், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு ஆகியவற்றை முன்னிட்டு 2018/64 என்ற அரசு ஆணையில் 1750 ஆயுள் சிறைவாசிகள் விடுதலை செய்ய பரிந்துரைக்கப்பட்டது, இதில் ஆளுநர் ஒரே சமயத்தில் அத்தனை நபர்களையும் விடுதலை செய்ய முடியாது என கூறி விட்டபோதும் மாநில அரசால் அவ்வப்போது சில நூறு நபர்களாக விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும் பெரும்பாலான இஸ்லாமிய சிறைவாசிகள் மட்டும் விடுதலை செய்யப்படவில்லை என்பதே கசப்பான உண்மை. சமீபத்தில் கோவை சிறையில் பத்து ஆண்டுகளை கழித்த சிறைவாசிகள் 334 நபர்களில் 207 பேர் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், இதில் 41 முஸ்லிம் சிறைக்கைதிகள் பத்து ஆண்டுகளை பூர்த்தி செய்த நிலையில் வெறும் ஏழு பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர். அதே போன்று இருபது ஆண்டுகளை கழித்த சிறைவாசிகளில் மொத்தமுள்ள 67 நபர்களில் 10 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இதிலும் முப்பது முஸ்லிம் சிறைக்கைதிகளில் ஒருவர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டார். இதேபோல் வீரப்பனின் அண்ணன் மாதையன் அவர்களும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளார் இவருக்கும் கருணையின் அடிப்படையில் விடுதலை வழங்க வேண்டும்.

எனவே கடந்த காலத்தில் சிறைவாசிகள் விடுதலையில் நிகழ்த்தப்பட்ட பாரபட்சங்கள் கடந்து அனைத்து சிறைவாசிகளையும் குறிப்பாக இஸ்லாமிய சிறைவாசிகள், ஏழு தமிழர்கள், வீரப்பன் அண்ணன் மாதையன், பட்டியலினத்தவர்கள், மற்றும் விளிம்பு நிலை மக்கள் உட்பட 10 ஆண்டுகள் கழித்த ஆயுள் சிறைவாசிகளை தாங்கள் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசு கருணையின் அடிப்படையில் பாரபட்சம் பாராமல் விடுதலை செய்ய வேண்டும் என மிக பணிவோடு இக்கூட்டறிக்கை குழுவானது தங்களைக் கேட்டுக் கொள்கின்றது.

இப்படிக்கு

**வழக்கறிஞர். பவானி பா.மோகன், மாநில தலைவர், NCHRO.**

<u>**கூட்டறிக்கைக்காக ஆதரவு அளித்தவர்கள்:**</u>

1. ஆசிரியர் கி.வீரமணி, தலைவர், திராவிட கழகம்
2. நீதியரசர் அரிபரந்தாமன், (ஓய்வு)
3. பேராசிரியர். அ.மார்க்ஸ், தேசியத் தலைவர், NCHRO
4. திரு.வைகோ,MP பொது செயலாளர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்
5. கே.பாலகிருஷ்ணன், மாநில செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
6. முத்தரசன், மாநிலச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

7. V.M.S. நெல்லை முபாரக், மாநிலத் தலைவர், எஸ்.டி.பி.ஐ கட்சி
8. சுப. வீரபாண்டியன், பொதுச்செயலாளர், திராவிட இயக்க தமிழ் பேரவை
9. கு.ராமகிருஷ்ணன், பொதுச்செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்
10. கொளத்தூர் மணி, தலைவர், திராவிடர் விடுதலை கழகம்
11. M. முஹம்மது சேக் அன்சாரி, மாநிலத் தலைவர், பாப்புலர் ஃப்ரண்ட்
12. திருமுருகன் காந்தி, ஒருங்கிணைப்பாளர், மே 17 இயக்கம்
13. சுப.உதயகுமார், பச்சை தமிழகம்
14. ஆளூர் ஷானவாஸ் MLA, விடுதலை சிறுத்தை கட்சி
15. வழக்கறிஞர். ஹென்றி தீபன், நிறுவனர், மக்கள் கண்காணிப்பகம்
16. தாவூத் மியாகான், காயிதே மில்லத் பேரன்
17. அமீர், திரைப்பட இயக்குனர்
18. வெற்றிமாறன், திரைப்பட இயக்குனர்
19. கரு.பழனியப்பன், திரைப்பட இயக்குனர்
20. சிம்புதேவன், திரைப்பட இயக்குனர்
21. பொன்வண்ணன், திரைப்பட இயக்குனர்
22. ராஜூமுருகன், திரைப்பட இயக்குனர்
23. களஞ்சியம், திரைப்பட இயக்குனர்
24. கோபி நயினார், திரைப்பட இயக்குனர்
25. நவீன், திரைப்பட இயக்குனர்
26. கவிஞர் லீனா மணிமேகலை, திரைப்பட இயக்குனர்
27. அனீஸ், திரைப்பட இயக்குனர்
28. P.R. பாண்டியன், தலைவர், தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு
29. இரா.அதியமான், நிறுவனர், ஆதித்தமிழர் பேரவை
30. நாகல்சாமி IAS, ஒருங்கிணைப்பாளர், மக்கள் பாதை
31. வழக்கறிஞர் சுந்தராஜன், பூவுலகின் நண்பர்கள்
32. M.S.ஷம்சுல் இக்பால் தாவூதி, மாநிலத் தலைவர், ஆல் இந்தியா இமாம்ஸ் கவுன்சில்
33. அருட்தந்தை. ஜெகத் கஸ்பர்
34. பியூஸ் மனுஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர்
35. பேராசிரியர் நித்யானந்த் ஜெயராம், சுற்றுச்சூழல் ஆர்வலர்
36. மீனா கந்தசாமி, சமூக செயற்பாட்டாளர்
37. கா.அஸ்ரப், மாநில தலைவர், கேம்பஸ் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா
38. வழக்கறிஞர் லஜபதி ராய்
39. வழக்கறிஞர் M.A. பிரிட்டோ, மனித உரிமை ஆர்வலர்
40. மதுக்கூர் இராமலிங்கம், மாநிலத்தலைவர், த.மு.எ.க.ச

41. பாலன், பொதுச்செயலாளர், தமிழ்த்தேச மக்கள் முன்னணி
42. சபரிமாலா, நிறுவனர், பெண் விடுதலை கட்சி
43. தீபக், ஒருங்கிணைப்பாளர், டிசம்பர் 3 இயக்கம்
44. குடந்தை அரசன், நிறுவனத் தலைவர், விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி
45. ஆதவன் தீட்சண்யா, பொதுச்செயலாளர், த.மு.எ.க.ச
46. இளையராஜா, தமிழ்நாடு மக்கள் இயக்கம்
47. வழக்கறிஞர் S.சேவியர் பிலிக்ஸ், தமிழக பொதுச்செயலாளர், (AILC)
48. C.J.ராஜன், வைகை சட்ட நிறுவனம்
49. மெஹபூப் பாஷா, சோகோ டிரஸ்ட்
50. அ.முத்துகிருஷ்ணன், எழுத்தாளர்
51. வழக்கறிஞர் சுகுமாரன், தேசிய செயற்குழு உறுப்பினர், NCHRO
52. கவிதா முரளிதரன், பத்திரிக்கையாளர்
53. தோழர் ஓவியா, நிறுவனர், புதியக்குரல்
54. ஷாஜு, ஒருங்கிணைப்பாளர், சுயாட்சி இந்தியா தமிழ்நாடு
55. வா.கீதா, சமூக செயற்பாட்டாளர்
56. ஜீவ சுந்தரி, சமூக செயற்பாட்டாளர்
57. கவிஞர் குட்டி ரேவதி
58. வழக்கறிஞர் சுதா ராமலிங்கம், மூத்த வழக்கறிஞர்
59. கவிஞர் சுகிர்தராணி, சமூக செயற்பாட்டாளர்
60. செல்வி மனிதி
61. சோனியா அருண், பத்திரிக்கையாளர்
62. பேராசிரியர் சாந்தி, சமூக செயற்பாட்டாளர்
63. கவின் மலர், பத்திரிக்கையாளர்
64. வழக்கறிஞர் உதயம்
65. வழக்கறிஞர் இ.அங்கயற்கணி
66. வழக்கறிஞர் ராஜகுரு
67. வழக்கறிஞர் அஜிதா
68. பேராசிரியர் வீ.அரசு
69. ஆசிரியர் உமா மஹேஸ்வரி, சமூக செயற்பாட்டாளர்
70. மஹாலட்சுமி, ஆசிரியர், சமூக செயற்பாட்டாளர்
71. வழக்கறிஞர் N.M. ஷாஜஹான், NCHRO
72. பிரபாகரன், TYSF
73. தன்வீர், TNTF